# காமன் கூத்து புலப்பெயர்வின் வரலாற்றுத் தடத்தினை அறிதல் : வன்னிப்பிராந்திய பரசன்குளத்தினை அடிப்படையாகக் கொண்ட விரிவான ஆய்வு

**சரண்யா, சி., நவதர்சினி, க.**
நாடகமும் அரங்கக்கலைகளும் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
saranyasivarasa68@gmail.com

*இந்த ஆய்வானது காமன் கூத்தின் புலப்பெயர்வின் வரலாற்றுத் தடத்தினை வன்னிப் பிராந்திய பரசன்குளத்தினை அடிப்படையாகக் கொண்டு நோக்குவதாக அமைகின்றது. 1823ம் ஆண்டு தென்னிந்தியாவில் இருந்து தோட்டத் தொழில்களுக்காக மக்கள் இலங்கையின் மலையக பகுதிக்கு அழைத்து வரப்பட்டனர். 1984ம் ஆண்டு ஈழத்தில் ஏற்பட்ட ஜீலை கலவரம் காரணமாக மலையகத்திலிருந்து இலங்கையின் பல்வேறு இடங் களுக்கு இந்த மக்கள் புலம்பெயர்ந்தனர். அவ்வாறு புலம்பெயர்ந்த மக்களில் ஒருபகுதியினர் மன்னார் பரசன்குள பிரதேசத்திலும் குடியமர்ந்தனர். குடியமர்ந்த மக்கள் அவர்களுடைய கலைகள், சடங்குகள், கலாசாரம், பண்பாடுகளைத் தங்களுடனே கொண்டு வந்தனர். அவர்களுடைய கலைவடிவங்களில் காமன் கூத்தும் ஒன்றாகும். கண்டி பிரதேசத்தில் எவ்வாறு காமன் கூத்து ஆற்றுகை செய்யப்பட்டதோ அதே தன்மையோடு பரசன்குள பிரதேசத்திலும் ஆற்றுகை செய்யப்பட்டது. காமன் கூத்து என்பது சடங்குடன் இணைந்த கூத்து வடிவமாக இருந்தாலும் மலையக, பரசன்குள மக்களது பண்பாட்டு வாழ்வியலில் ஒர் அம்சமாக இருக்கிறது. குறிப்பாகச் சமயப் பண்பாட்டு வடிவங்களில் காமன் கூத்து ஒரு முக்கிய இடத்தைப் பெறுகிறது. பரசங்குள மக்கள் காமன் கூத்து ஆற்றுகை செய்யும்போது இந்தியாவின் தஞ்சாவூரில் இருந்து பிடிமண் எடுத்துக்கொண்டு வந்து ஆற்றுகையில் ஈடுபட்டார்கள். இந்தியாவிற்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டபோது அவர்கள் கண்டியில் இருந்த மண்ணினை எடுத்து வந்து காமன் கோவில் அமைத்து ஆற்றுகை செய்தார்கள். பரசன் குளத்துக்குப் புலம்பெயர்ந்து மக்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளின் மத்தியில் வாழ்ந்தாலும் தமது பாரம்பரிய, பண்பாடுகளையும் கலைகளையும் பேணி வந்தார்கள். இவர்களால் பரசன்குளப் பிரதேசத்தில் காமன்கூத்து நீண்டகாலம் ஆற்றுகை செய்யப் பட்டது. பரசன் குளத்தில் கூத்தானது நிலைத்திருக்காமைக்கான காரணங்களை கண்டறிவதால் மீண்டும் கூத்து ஆடுவதற்கான சாத்தியப் பாடுகளை அறிதல் என்பனவே இந்த ஆய்வின் நோக்கமாகும். இவ் ஆய்வின் மூலம் பரசன்குளம் காமன் கூத்தின் தனித்துவத்தினையும், அது அப்பிரதேச மக்களின் வாழ்வியலுடனும் பண்பாட்டுடனும் பிணைந்துள்ள வகை என்பவற்றை விளங்கிக் கொள்ள முடியும். அத்துடன் அதை மீண்டும் ஆடுவதற்கான உத்வேகத்தையும் ஏற்படுத்த முடியும்.*

**திறவுச் சொற்கள்:** காமன்கூத்து, புலப்பெயர்வு, வளர்ச்சி, சமூக கட்டமைப்பு, நிலைதில்லாமை